### (5) அமைச்சர் அறிக்கை.

**கோதுமை வழங்கல்குறித்து துணை வினாவிற்கு (எண் 109) அளித்த விடையைச் சரிசெய்து உணவு அமைச்சர் அளித்த அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக 25----8—1969 அன்று 109-ஆம் எண்ணுள்ள கேள்வியின் துணைக்கேள்வி ஒன்றுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அளித்த பதில்குறித்து ஒரு விளக்க அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் 25—8—1969 அன்று 103 ஆம் எண்ணுள்ள வினாவிற்கு திரு. நா. வீராசாமி அவர்களால் விடுக்கப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடை அளிக்கையில் பொதுமக்களிடையே கோதுமை உணவைப் பரப்புவதற்காக அவர்களுக்கு இலவசமாகக் கோதுமை வழங்க ஆயிரம் டன் கோதுமை வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது என்று நான் பேரவைக்குத் தெரிவித்தேன். சரியான நிலை என்னவெனில், வறட்சியால் தாக்குண்ட பகுதிகளில் துயர் தணிப்புப் பணியில் பணிபுரிய இயலாத மூப்பால தளர்ச்சியுற்றவர்களுக்குக் கருணை உதவியாக வழங்குவதற்கு வேண்டி நன்கொடை கோதுமை 100 டன் மட்டுமே இந்திய அரசின் உணவு வேளாண்மை அமைச்சகம் ஒதுக்கியுள்ளது. கோதுமை உணவுப் பண்டங்களைப் பரப்புவதற்காகச் சிறப்புக் கட்புல விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் 100 டன் நன்கொடை கோதுமை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் தாக்குண்ட பகுதிகளில் துயர் தணிப்புப் பணியில் பணிபுரிய இயலாத ஏழை மக்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் நன்கொடை கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் வழங்கப்படுவது குறித்தும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### (6) 1970-71-ஆம் ஆண்டுக்கான நீதிக் கோரிக்கைகள்மீது விவாதம் (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பத்திரப்பதிவுத்துறை, எழுதுபொருள் அச்சுத்துறை, மாநிலச் சட்டமன்றம் ஆகிய மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. நேரத்தை எப்படி ஒதுக்கிக்கொள்ளலாம்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் இரண்டுக்கும் ஒரு மணி நேரம் ஒதுக்கிவிட்டு, பாக்கி நேரத்தைச் சட்டமன்ற மானியத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 11-30 மணி வரை பத்திரப் பதிவுத்துறை, எழுதுபொருள் அச்சுத்துறை மானியக் கோரிக்கைகள்; அதற்குப்பிறகு மாநிலச் சட்டமன்ற மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்வோம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** எழுதுபொருள் அச்சுத்துறைபற்றி சொல்ல வேண்டியவை இருக்கின்றன. ஆகவே மொத்தமுள்ள நேரத்தை இதற்குப் பாதி, அதற்குப் பாதியாக ஒதுக்கிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலாவதாக பத்திரப் பதிவுத்துறை எழுதுபொருள் அச்சுத்துறை மானியங்களை எடுத்துக் கொள்வோம். 12 மணி வரை இவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படுகிறது.